DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.41/2025

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திரு.உதயசங்கர் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)
17.02.2026 at 01.15 P.M.

முதல் விசாரணை

1. நான் தற்போது சிக்கல் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 27.01.2025 தேதியன்று காலை 09.00 மணியளவில் சார்பு ஆய்வாளருக்கு மதுபாட்டில்கள் விற்பனை செய்வது சம்மந்தமாக தகவல் கிடைத்தது. நானும், இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகன், மற்றும் சார்பு ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் சிக்கல் டாஸ்மாக் அருகே ரோந்து சென்ற போது எதிரி ரமேஷ் எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை சந்தேகப்படும் படியாக அவரை சோதனை செய்த போது ஒரு கட்டைபையில் Old Chef என்ற லேபிள் ஒட்டப்பட்ட 44 மதுபாட்டில்களை வைத்திருந்தார். எதிரியை தக்க காரணம் கூறி கைது செய்து அங்கு தனிநபர்கள் யாரும் இல்லாதால் எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். அந்த அத்தாடசியில் நானும் இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகனும் கையொப்பம் செய்தோம். காலை 10.00 மணியளவில் எதிரியை கைது வழக்கு சொத்துக்களுடன் கைது செய்து நிலையம் கொண்டு வந்து சிக்கல் காவல் நிலைய குற்ற எண். 7/2025, பிரிவு 4(1)(c) TNP Act ன் படி சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நாங்கள் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக நாங்கள் இருந்தோம். இது தொடர்பாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு வழக்கமான ரோந்து பணியில் சென்றோமா அல்லது தகவல் கிடைத்த பிறகு சென்றோமா என்றால் தகவல் கிடைத்ததன் பேரில் சென்றோம். எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் காலை 09.00 மணிக்கு. சம்பவ இடத்தில் எவ்வளவு மணி நேரம் இருந்தோம் என்றால் சமார் 1/2 மணி நேரம் இருந்தோம். எங்கள் காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு சென்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் எங்கள் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான்.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பிராந்தி பாட்டில்களை எங்கு வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் அவர் கையில் வைத்திருந்தார் எங்கு வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சம்வ இடம் சென்றோம் என்றால் காலை 09.10 மணிக்கு. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அத்தாட்சியானது காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் காண்பிக்கப்பட்ட மதுபாட்டில்களானது வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேலகதிகாரியின் உத்தரவின் பேரில் புள்ளி விவர கணக்கிற்காக பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/–சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி